* 19 *Q.*—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to enhance the minimum wages of municipal workers; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) No. Sir.

(*b*) Does not arise.

Sri N. K. PALANISAMI : பல முனிசிபாலிடிகளில் குறைந்தபட்ச கூலி (basic wage) ரூபாய் 10 ஆக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பம்பாயில் ரூபாய் 18 ஆகவும், மைசூரில் ரூபாய் 16 ஆகவும் நிர்ணயித்திருக்கிறார்கள். ஆகவே குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்துவதற்கு இந்த மாகாணத்தில் எப்பொழுது நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள் ?

The Hon. Sri R. VENKATARAMAN : 1952-ம் வருஷத்தில் முதல் முதலாக ஸ்தல ஸ்தாபனங்களில் குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்யப்பட்டது. ஐந்து வருஷத்திற்கு ஒரு முறை இந்த கூலி நிர்ணயம் செய்யப்பட்டு வருகிறது. அதன்படி 1957-ம் வருஷத்தில் குறைந்தபட்ச கூலி நிர்ணயிக்கப்பட்டது. அடுத்தபடியாக 1962-ம் வருஷத்தில் எடுத்துக் கொள்ளப்படும். ஆகவே அதற்கு இப்பொழுது ஒன்றும் அவசியம் இல்லை.

Sri M. KALYANASUNDARAM : நேற்று கவர்னர் அவர்கள் ஆற்றிய உரையில் கமிஷன் செய்யும் சிபார்சு ஸ்தல ஸ்தாபன ஊழியர்களுக்கும் பொருந்தும் என்று சொல்லப்பட்டது. ஆனால் கனம் மந்திரி அவர்கள் பொருந்தாது என்று சொல்வதற்கு காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri R. VENKATARAMAN : நான் அப்படி ஒன்றும் சொல்லவில்லை.

* 20 *Q.*—Sri M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any suggestion has been received from the Central Board for Salt for bringing salt workers within the scope of the Minimum Wages Act; and

(*b*) if so, the action taken thereon?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) The Government decided to defer the question of extending the Minimum Wages Act to the salt industry as the existing staff of the Factories Department cannot take up any additional work at present.

Sri M. S. SELVARAJAN : குறைந்தபட்ச கூலி நிர்ணயம் தற்காலிகமாக நிறுத்திவைத்திருக்கும் நிலையில் இப்பிரச்சனையில் ஒரு பரிகாரம் காணுவதற்கு வசதியாக உப்புத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களும்

5th February 1959]

சர்வீஸ் கண்டிஷன், கூலி நிர்ணயம் போன்ற விஷயமாக கவனிப்பதற்கு ஒரு கமிட்டி நிறுவிப் பரிசீலிப்பதற்கு அரசாங்கம் கவனம் செலுத்துவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்பொழுது எவ்விதமான பரிசீலனையும் இல்லை. பின்பு அவசியம் ஏற்பட்டால் ஒரு கமிட்டி ஏற்படுத்த யோசிக்கப்படும்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Are the Government aware of the fact that in many factories workers themselves have taken to the manufacture of salt and if so, how they proposed to enforce this Act?

THE HON. SRI R. VENKATARAMAN : In fact there are some co-operative societies of salt workers in the State and they are paying fairly adequate wages. So the question of minimum wages does not arise in their case.

Parks at Dam-sites

*21 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) இம் மாநிலத்திலுள்ள ஆறுகளின் அணைக்கட்டுகளுக்கு அருகே பூங்காக்கள், நீரூற்றுகள் கட்டும் உத்தேசமுண்டா ?

(ஆ) அப்படியானால் எங்கெங்கே ? என்ன செலவில் ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) The Government have approved the formation of parks at the following places at the cost shown against each :—

	RS.
(1) Lower Bhavani (Park)	1,80,000
(2) Amaravathi Reservoir Project at Amaravathinagar (Park)	1,00,000
(3) Krishnagiri Reservoir 2Project Dam-site (Park)	52,000

The Government have under consideration the improvements to the park in the rear of Mettur Dam at a cost of Rs. 2,40,600 and a proposal for the formation of parks and fountains at the Sathanur reservoir dam-site at an estimated cost of Rs. 1,00,000.

Besides the above, the formation of parks and springs at the following places at the cost shown against each is under consideration of the Chief Engineer (Irrigation) :—

	RS.
(1) Grant Anicut (Garden and Fountain)	12,000
(2) Cauvery Upper Anicut (Garden and Fountain).	5,250
(3) Veeranam tank and Shatiatope Anicut (Gardens)	5,000 at each place.
(4) Pondi Regulator Area (Parks and Fountains).	16 000

The work on the formation of a park at the Vaigai Dam-site has been taken up.